0 1 OCT 2010
சேப்பாக்கம், சென்னை-5

சுருக்கம்

தமிழ்நாடு அரசு ஓய்வூதியர் நல நிதித் திட்டம், 1995 - தமிழ்நாடு நகராட்சி ஓய்வூதியதாரர்களின் வாழ்க்கைத் துணைக்கும் (Spouse) நீட்டித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.3) துறை

அரசாணை(நிலை) எண். 223 நாள்: 29.09.2010

படிக்கப்பட்டது:-

(1) அரசாணை (நிலை) எண்.36, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.3) துறை, நாள் 10.03.2000.

(2) அரசாணை(ப) எண்.323, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.3) துறை, நாள் 14.07.2009.

(3) அரசாணை(நிலை) எண்.474, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள் 30.09.2009.

(4) இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை அவர்களின் கடிதம் ந.க.எண்.PP4/1466/2010, நாள் 09.02.2010.

******

ஆணை:-

உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட தனது கடிதத்தில், தமிழ்நாடு நகராட்சி ஓய்வூதியதாரர்களின் மருத்துவ நலத் திட்டம் மற்றும் குடும்ப பாதுகாப்பு நலத்திட்டம் குறித்த வழிகாட்டு நெறிமுறைகள் மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 01.08.1999 முதல் முன்தேதியிட்டு வெளியிடப்பட்டன என்றும், மேலும், அரசு கடித எண்.31661/நப.3/2007-3, நாள் 23.11.2007-ல் நகராட்சி மற்றும் மாநகராட்சி ஓய்வூதியதாரர்களுக்கான மருத்துவ உதவித் திட்டம் மற்றும் குடும்ப பாதுகாப்புத் திட்டம் குறித்து அரசாணை(நிலை) எண்.120, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 20.05.1999-ல் வெளியிடப்பட்ட ஆணையின் அடிப்படையில், தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்கள் மருத்துவ உதவி மற்றும் குடும்ப பாதுகாப்புத் திட்டம் ஆகியவற்றிற்கு ஏற்கனவே வெளியிடப்பட்ட மற்றும் வெளியிடப்படும் அனைத்து சலுகைகளும் நகராட்சி மற்றும் மாநகராட்சி ஓய்வூதியதாரர்களுக்கும் பொருந்தும் என அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு நகராட்சி ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்படும் மருத்துவ உதவித் தொகை, 01.04.2009 முதல், ரூ.1,00,000/- அல்லது அவர்கள் மேற்கொண்ட சிகிச்சைக்கான மொத்த செலவினத்தில் 75 சதவீதம் இதில் எது குறைவோ அதை வழங்கலாம் என்றும், மாதாந்திர சந்தா

தொகையினை ரூ.30/—லிருந்து ரூ.50/—ஆக உயர்த்தி 01.04.2009—லிருந்து அதிகம் பிடித்தம் செய்ய ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு அரசு ஒய்வூதியதாரர் நலநிதித் திட்டம் 1995, ஓய்வூதியதாரர்களின் வாழ்க்கைத் துணைக்கும் (Spouse) நீட்டித்து கீழ்க்கண்டவாறு ஆணையிடப்பட்டுள்ளது:-

(i) தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்கள் நலநிதித் திட்டம் 1995, ஓய்வூதியதாரர்களின் வாழ்க்கைத் துணைக்கு 17.02.2009 முதல் பொருந்தும்.

(ii) இதன்படி அதிகபட்ச மருத்துவ உதவித் தொகையான ரூ.1,00,000/—ல் எந்தவித மாற்றமும் இல்லை அதாவது ஓய்வூதியதாரர் மற்றும் அவரது வாழ்க்கைத் துணை இருவருக்கும் செலவாகும் மொத்த மருத்துவச் செலவு ரூ.1,00,000/— அல்லது 75% இதில் எது குறைவோ இருவருக்கும் சேர்த்து வழங்கப்படும். (There is no change in the maximum ceiling limit of Rs.1,00,000/- (i.e.) assistance under the scheme shall be sanctioned to the maximum extent of Rs.1,00,000/- or 75% of the actual cost of treatment, whichever is less, for both the pensioner and spouse, combined together.)

(iii) தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்களுக்கு மேற்படி திட்டத்திற்கு செலுத்த வேண்டிய மாத சந்தா தொகை ரூ.50/—லிருந்து ரூ.100/— ஆக அதிகரித்து 01.09.2009 முதல் பிடித்தம் செய்யப்படும்.

4. உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர் தனது கடிதத்தில் அரசாணை(நிலை)எண்.474, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள் 30.09.2009—ல் 1995—ம் ஆண்டைய தமிழ்நாடு அரசு ஓய்வூதியர் நல நிதித் திட்டத்தினை, அரசு ஓய்வூதியதாரர்களின் வாழ்க்கைத் துணைக்கு (Spouse) விரிவுபடுத்தி பிறப்பிக்கப்பட்ட அரசாணையைப் போல, 2009—ம் ஆண்டைய தமிழ்நாடு நகராட்சி ஓய்வூதியதாரர் நல நிதித் திட்டத்தின் கீழ் நகராட்சி ஓய்வூதியதாரர்களின் வாழ்க்கைத் துணைக்கும் (Spouse) விரிவுபடுத்தி, அதனை வழங்க தமக்கு ஒப்பளிப்பு அதிகாரம் வழங்கக் கோரியுள்ளார்.

5. உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரின் செயற்குறிப்பு அரசால் ஆய்வு செய்யப்பட்டது. ஆய்விற்குப் பின், மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 1995—ம் ஆண்டைய தமிழ்நாடு அரசு ஓய்வூதியர் நல நிதித் திட்டத்தினை, அரசு ஓய்வூதியதாரர்களின் வாழ்க்கைத் துணைக்கு (Spouse) விரிவுபடுத்தி பிறப்பிக்கப்பட்ட அரசாணையைப் போல, 2009—ம் ஆண்டைய தமிழ்நாடு நகராட்சி ஓய்வூதியதாரர் நல நிதித் திட்டத்தின் கீழ் நகராட்சி ஓய்வூதியதாரர்களின் வாழ்க்கைத் துணைக்கும் (Spouse) விரிவுபடுத்தி அதனை வழங்க உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநருக்கு ஒப்பளிப்பு அதிகாரம் வழங்கி அரசு ஆணையிடுகிறது. இச்சலுகை, இவ்வரசாணை வெளியிடப்படும் நாள் முதல் அதாவது ஓய்வூதியதாரர்களின் வாழ்க்கைத் துணை மேற்கொள்ளும் சிகிச்சை அல்லது அவர்கள் இத்திட்டத்தில் சேர விருப்பம் தெரிவிக்கும் நாள், இதில் எது பிந்தியதோ அந்ததேதி முதல் அமலுக்கு வரும்.

6. இவ்வரசாணை, நிதித்துறையின் அ.சா.கு.எண்.166/JS(KK)/2010, நாள் 16.08.2010–ல் பெறப்பட்ட இசைவின்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக் வர்தன் ஷெட்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை – 600 005.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, குறளகம், சென்னை – 600 108.
நகல்:– நிதி (ந.நி.கு.வ)துறை, சென்னை – 600 009.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதன்மைச் செயலர் அவர்களின் தனிச் செயலாளர், நகராட்சி நிர்வாகம்
மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை– 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந.2) துறை, சென்னை– 600 009.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.